2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன், திரு. வை. சுவாமிநாதன், திரு. கருப்பையா ஆகியவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடப்பட்டதைப்பற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. கோவிந்தராஜன் அவர்கள், இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்த விதிகளின்கீழ் வரும் என்பதுபற்றி சுருக்கமாக விளக்கலாம்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் விடுதியில் இசைத் தட்டுக்கள் முழங்கிவருவது வழக்கம். அவைகள் பல்வேறுவிதமான பாஷைகளில் இருப்பது வழக்கம். இந்தியிலே அந்தச் சங்கீதம் இருக்கும் அல்லது தமிழிலே இருக்கும் அல்லது ஆங்கிலத்திலேகூட இசைத்தட்டுகள் முழங்குவது வழக்கம். திடீரென்று ஒருசாரார், தமிழிலே மட்டும்தான் அதை வைக்க வேண்டுமென்றும், இன்னொரு சாரார், எப்பொழுதும்போல் எல்லா மொழிகளிலும் இருக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அதன் விளைவாக, மாணவர் களிடையே சிக்கல்கள் ஏற்பட்டு, தகராறுகள் ஏற்பட்டு, குறிப்பிட்ட ஒரு சாரார், தமிழில் மட்டும்தான் இருக்கவேண்டுமென்று சொல்லக் கூடிய சாரார், மற்ற மாணவர்களை அடித்ததன் விளைவாக, அந்த அடித்த மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் அதிகாரிகளால் சஸ் பெண்ட் செய்யப்பட்டார்கள். அதன் விளைவாக அங்கு ஒரு கொந் தளிப்பு ஏற்பட்டு அதைச் சரியான முறையிலே சமாளிக்க முடியாத படி, அந்தப் பல்கலைக் கழகமே மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல, எல்லாக் கல்லூரிகளிலுமே இப்படிப்பட்ட நிலைமையிருப்பதால், நமது மாணவர்களை சரியான முறையில் கட்டுப்படுத்தவும், அவர் களுடைய கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்கும், பெற்றோர் களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமலிருப்பதற்கும், பணம் நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்கும், மாணவர்களின் கல்வி தொடர்ந்து நடைபெறுவதற்குமான பொதுவான வழிமுறைகளை இந்த மன்றத்தில் விவாதித்து, சரியான முறையில் பல்கலைக் கழகத் திற்கும், கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் தாக்கீது அனுப்பும் முறை யில் இந்த விவாதத்தை இங்கு நடத்துவதற்கு, சபையின் பிற அலு வல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

3. நடைமுறைக் கேள்வி.

ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கும் போது அதை எடுத்துக்கொள்வதற்கு முன் அதே பொருள் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டது குறித்து.

Dr. H. V. HANDE : Sir, on a point of Order. We have already given Call Attention Notices on the Annamalai University and also on the Land Grab Movement. We have given these Call Attention Notices because the Hon. Speaker himself has advised us that as far as possible we must give Call Attention